விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 38 ஆடி: 2 துல் ஹஜ்தா: பிறை: 24 இதழ் 149
யாழ்ப்பாணம் புதன்கிழமை 18-07-1990

University of Jaffna RECEIVED 1990-07-18 Periodicals Division Library

### வல்லை வெளியில்
## பிரயாணிகள் பஸ் மீது ஹெலி தாக்குதல்!

(வடமராட்சி)

வல்லைவெளியில் பிரயாணிகள் மினி பஸ் ஒன்றின் மீது ஹெலிகொப்டரிலிருந்து நடத்திய தாக்குதலினால் மினி பஸ் சேதமடைந்துள்ளதுடன் சிலர் காயமடைந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து பெருந்தொகையான பிரயாணிகளுடன் பருத்தித்துறை நோக்கிச்சென்ற மினி பஸ் மீதே இத் தாக்குதல் நடைபெற்றது.

ஹெலியின் திடீர் தாக்குதலையடுத்து பஸ்ஸிலிருந்தவர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்திற்கான மின்சாரம் நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் துண்டிக்

(4-ம் பக்கம் பார்க்க)

# முகாம்களை விட்டு வெளியேற ராணுவம் பகீரதப்பிரயத்தனம்!

## வடபகுதியில் தாக்குதல்கள் தீவிரமடைகிறது!

(வடமராட்சி)

வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து வெளியேற அரசபடையினர்நேற்று பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளனர்! ஆனாலும், அரசபடையினரின் முகாம்களை சுற்றிவளைத்து விடுதலைப் புலிகள் பலத்த அரண்களும், கண்ணிவெடிப் பொறிகளும் அமைத்து எதிர்த்தாக்குதல் நடத்திவருவதால் ஆயுதப்படையினர் முகாம்களை விட்டு வெளியேற முடியாத நிலையில் நேற்றிருந்தனர்.

முப்படைத் தளபதிகளின் உத்தரவை, அடுத்தே படையினர் முகாம்களைவிட்டு வெளியேறுவதற்குத் தயார்நிலையில் உள்ளனர்.

நேற்று அதிகாலை ஆனையிறவு முகாமைச் சேர்ந்த அப்படையினர் முகாமை விட்டு வெளியேற முயற்சித்த வேளையில், விடுதலைப் புலிகளின் தீவிர எதிர்த்தாக்குதல்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் உள்ளே ஒதுங்கிக் கொண்டனர் என்று அறியப்படுகிறது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை விடுதலைப் புலிகள் ஆனையிறவு முகாம் நோக்கி எதிர்த் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இதே நேரத்தில் வவுனியா,

(4ம் பக்கம் பார்க்க)

## தனது மகனை போருக்கு அனுப்பிய அன்னை

(நாவற்குழி)

பத்துமாதம் சுமந்து பால் ஊட்டி, சீராட்டி வளர்த்த தனது மகனை போர்முனைக்கு அனுப்புவதற்கு பயிற்சி பெறுவதற்காக தென்மராட்சியைச் சேர்ந்த அன்னை ஒருவர் விடுதலைப் புலிகளிடம் கையளித்தார்.

மட்டுவிலைச் சேர்ந்த திருமதி கி. செல்வராணி என்ற அன்னையே தனது பன்னிரண்டு வயது மகன் கி. பாஸ்கரன் என்பவரை தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பாவிடம் ஒப்படைத்தார்.

தனது மகளும் விரும்பினால் போர்முனைக்கு அனுப்புவதற்

[4-ம் பக்கம் பார்க்க]

## அகதிகளுக்கு 25,000 உடைகளை 'தென்றல்' குழு சேகரித்தது

[யாழ்ப்பாணம்]

திருமலையிலிருந்து வந்து முல்லைத்தீவு அகதி முகாம்களில் தங்கியிருக்கும் 30,000 அகதிகளுக்காக யாழ்குடாநாட்டில் 25,000 க்கும் அதிகமான உடைகளை சேகரித்துள்ளோம் என்று புதிய உயர்

[4-ம் பக்கம் பார்க்க]

## யாழ் பாடசாலைகள் இயங்காது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தையும் தற்போதைய சூழ்நிலைகாரணமாக மூடுவதென்று, நேற்று முன்தினம் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற கல்வி அதிகாரிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கில் சுமுகநிலை தோன்றிய பின்னரே இலங்கை பூராவும் க. பொ. த. (உயர் தர) பரீட்சையை நடத்த வேண்டுமென்று கல்வியமைச்சைக் கோரும் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேறியது.

## கருணாநிதியை சந்திப்பார்கள்

(கொழும்பு)

இலங்கையின் இன்றைய நிலை குறித்து. இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து விளக்குவதற்குப் புதுடில்லி சென்றுள்ள இலங்கைப் பாராளுமன்றத் தூதுக் குழுவினர், இலங்கை திரும்புவதற்கு முன்னர் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். (அ)

## குண்டுவீச்சினால் யாழ். செயலகம் முற்றாகப் பாதிப்பு!

(மானிப்பாய்)

பொம்மர் விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டுவீச்சினால் யாழ். செயலகம் முற்றாக பாதிப்புக்குள்ளாகியது.

கடந்த சனிக்கிழமை மாலை யாழ். பழைய செயலகத்தின் முன் விழுந்து வெடித்த குண்டினால் யாழ். செயலகத்தின் சகல பிரிவுகளும் பெரும்சேதத்திற்குள்ளாகின.

குண்டின் ஒருபகுதி செயலகத்திலுள்ள பாரிய வாகை மரத்தைத் துளைத்து கடவுச்சீட்டு அலுவலக பின்சுவரை தாக்கியுள்ளது.

இக்குண்டுவீச்சினால அரச

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் வர்த்தக நிலையங்கள் தினம் தினம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் தினமும் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாறிவருகின்றன

பெரிய கடை, ஆஸ்பத்திரி வீதி. பஸ் நிலையக் கடைகள். கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி, நாவலர் வீதிக் கடைகள், புத்தக சாலைகள் யாவும் நல்லூர், கொக்குவில், கோண்டாவில், மானிப்பாய் ஆகிய பகுதிகளுக்கு இடம்மாறி வருகின்றன.

நவீன சந்தையிலுள்ள கடைகளும் தினமும் இடமாற்றம் செய்யப்பட்டுவருகின்றன.

யாழ். நகரில் தொடர்ந்து விமானத் தாக்குதல் நடைபெற்றுவருவதால் நகரில் இருந்து மேலும் பல குடும்பங் இடம்மாறி வருகின்றனர்.

## யாழ். நகரில் நேற்று முன்தினம் புலிகள் தாக்கியதால் 2யுத்த விமானங்கள் சேதம்

### எவ். எம். மீற்றர் தகவல்

[யாழ்ப்பபணம்]

யாழ் நகர்மீது நேற்றுமுன்தினம் தாக்குதலில் ஈடுபட்ட மூன்று அவ்ரோ விமானங்களில் இரு விமானங்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி உள்ளதாக, மேற்படி விமானங்களின் விமானிகளின் சம்பாஷனைகளிலிருந்து தெரியவருகின்றது.

இவ்விமானிகள் ஒருவருடன் மற்றவர் கதைத்த வசனங்கள் 'எவ். எம்' மீற்றரில் மிகத் தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருந்தது.

''எனது விமானத்தின் கீழ்ப்பகுதியில் சூடு பட்டுள்ளது. இனி செங்குத்தாக போய் குண்டு போடமுடியாது. சமநிலையில் நின்று

(4-ம் பக்கம் பார்க்க)

### யாழ். நகரில் தொடரும் விமானத் தாக்குதல்:
## குருநகரில் நான்கு வீடுகள் தரைமட்டம்! 15வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர்பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை நடாத்தப்பட்ட. விமானத் தாக்குதலில் பதினைந்து வீடுகள் சேதமடைந்தன. இவற்றில் நாலு வீடுகள் தரைமட்டமாககப்பட்டதுடன் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் சேதமடைந்தன.

மேற்படி விமானத் தாக்குதலில் மூன்று 'அவ்ரோ' விமானங்களும் ஒரு ஹெலிகொப்டரும் ஈடுபட்டிருந்தன.

(4-ம் பக்கம் பார்க்க)

## கோட்டைப் பகுதியில் 24 பொதிகள் போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிற்கு நேற்று முன்தினம் மூன்று விமானங்கள் இரண்டு தடவைகளாக வந்து 24 பொதிகளைப் போட்டன.

[illegible] ஒரு ஹெலிகொப்டரின் உதவியு

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மேற்கே பாரிய விமானத் தாக்குதல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்கு மேற்கேயுள்ளபடுவான் கரைப்பகுதிகளில் பாரிய விமானத்தாக்குதல்கள் இலங்கை விமான படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடகத்திற்கு எதிலும் நிச்சயமற்றதன்மை!

## சிங்கராசியினருக்கு புத்திரரால்கவலையுண்டு

## கன்னியினருக்கு மனக்கலக்கம் இருக்கும்

கீழைத்தேய சோதிட சாஸ்திரத்தில் கிரகங்களின் பார்வைகள் பற்றி எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆனல் மேலைநாட்டுச் சோதிட சாஸ்திரத்தில் பார்வைகள் பற்றிய ஆராய்ச்சிகள் சற்று விஸ்தீரணமாகவுள்ளன.

சேர்க்கைப் பார்வை (Conjunction) யின் அளவு பூஜ்யம் பாகையாகும்; அதாவது இரு கிரகங்களுக்கிடையேயுள்ள தூரம் பூஜ்யம் பாகையாக இருப்பின் இரு கிரகங்கள் ராசி மண்டலத்தில் ஒரேயிடத்தில் நிற்பின் முழுவாகவுள்ள சேர்க்கைப் பார்வையாகும்.

அரைக் கோணப்பார்வை (Semisextile) இதன் அளவு முப்பது பாகையாகும். இரு கிரகங்களுக்கிடையில் உள்ள தூரம் முப்பது பாகையின் அரைக்கோணப் பார்வையாகும்.

அரைசதுரப்பார்வை (Semisqure) இதன் அளவு நாற்பத்தைந்துபாகையாகும். இரு கிரகங்களுக்கிடையிலான தூரம் 43 பாகையில் ஆரம்பித்து 47 பாகையில் முடியும்.

கோணப் பார்வை (Sextile) இதன் சரியான அளவு 60 பாகையாகும். 55 பாகையில் ஆரம்பித்து 65 பாகையில் முடிவுறும்.

சதுரப் பார்வை ,Squre) இதன் சரியான அளவு தொண்ணூறு பாகையாகும். எண்பத்தைந்து பாகையில் ஆரம்பித்து தொண்ணூறு பாகையில் முடிவடையும்.

இருகோணப் பார்வை (Trine) இதன் சரியான அளவு 120 பாகையாகும். 115 பாகையில் இருந்து 120 பாகைவரைவுள்ளது.

எதிர்ப்பார்வை (Opposition) இதன் சரியான அளவு 180 பாகையாகும். இது 175 பாகையில் இருந்து 185பாகை வரைவுள்ளது.

மேலை நாடுகளில் வியாழ மாற்றங்கள் இவைகளை அடிப்படையாக வைத்தே கணிக்கப்படுகின்றன.

### கடகம்

புனர்பூசம் 4ம் பாதம் முதல் பூசம், ஆயிலியம் முடிய) குருபகவான் இவர்களது ராசியில் அமர்ந்து ஐந்தாவது பார்வையால் பஞ்சம் ஸ்தானத்தைப் பார்ப்பதால், இவர்களின் செல்வம், நட்பு, மகிழ்ச்சி போன்றவற்றில் நிச்சயமற்ற தன்மை இருந்துவரும். பிறரிடம் மகிழ்ச்சிகரமாகவும், கௌரவமாகவும் நடந்து கொள்வார்கள். பகைவர்களால் ஏற்படும் துன்பங்களை சமாளிக்க வேண்டிவரும். பிறரைப்பணியவைக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதில் அவர்களே தோற்றுப்போகும் நிலை இருந்துவரும். தந்திரத்தையும், சாமார்த்தியத்தையும் கடைப்பிடித்து காரிய மாற்ற வேண்டியநிலை உருவாகும். புத்திரர் மூலம் பொருளாதார வசதியுண்டாகும். மாணவர்களாயின் வெளிநாட்டு கல்வி பலிதமளிக்கும்.

குருபகவான் ஏழாவது பார்வையால் இந்த ராசிக்கு ஏழாம் இடத்தை திடமாக பார்ப்பதால், தனலாபமும், கடன் சுமைகளும் குறையும். வீடு, வாகனம், மேல்படிப்பு, மூலம் திருப்தியான பெறுபேறுகள் கிட்டும். உடல்நிலை பாதிக்கப்பட்டு வைத்தியச்செலவு அதிகரிக்கும். தொழில் துறையில் பணியாட்துன்பம் தருவர் தொழில் துறையில் மனத்தாங்கல் அதிகரிக்கும் தந்தைவழிப் பிரச்சனைகள் உண்டாகும். அந்நியர்களினல் நல்ல இலாபங்கள் கிட்டும். சகோதர ஒற்றுமை நிலைக்கும்.

குருபகவான் ஒன்பதாவது பார்வையில் இந்த ராசிக்குப் பாக்கியஸ்தானத்தைப் பார்ப்பதால், தாயார். மாதாவழி உறவினர், மனைவி, மக்களிடம் விரோதித்துக்கொள்ள நேரிடும். சிலருக்கு வாழ்க்கையில் வெறுப்புண்டாகும். ஞானமார்க்கத்தில் அதிக ஈடுபாடு கொண்டு செயல்படுவர். தொழில் துறையில் நெருக்கடி நிலை இருந்துவரும். கஷ்டமான பயணங்கள் ஏற்படும். முயற்சிகளில் பலிதமின்மை காணப்படும்.

### சிங்கம்

(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம் முடிய)

குருபகவான் சிங்கராசிக்கு பன்னிரெண்டாம் வீட்டில் அமர்ந்து சுகம், சத்துரு, அட்டமம் ஆகிய இடங்களைப் பார்ப்பதால் குடும்பத்தில் அபிவிருத்தி காணப்படும். உறவினர் அன்புடன் பழகுவார்கள். தொழில்துறைகளில் நல்லமுன்னேற்றம் காணப்படும். மனநிம்மதி கிட்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும், திருமணம் பல்வகை சிறப்புக்

> வியாழ மாற்றம்
>
> ராசிவாரியாக பலன்கள்
>
> அங்கம் 7
>
> ஜோஸ்யர் எழுதுவது

களுடன் கைகூடும். கூட்டுத் தொழிலில் ஆதாயமுண்டு.

குருபகவான் ஐந்தாவது பார்வையால் இந்தராசிக்கு நாலாம் ஸ்தானத்தைப் பார்ப்பதால், தொழில், கல்வியில் மேன்மையடைவர். வெளிநாட்டுப் பயணங்கள் சிலருக்கு கைகூடும் வாய்ப்புண்டு. அரசாங்க துறையில் பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டும் பதவி உயர்வும் கிட்டும். தொழில் தகராறுகள் சாதகமாகவே முடியும். வீடு, நிலம், வாகனம் வாங்கும் யோகமுண்டு.

குருபகவான் ஏழாவது பார்வையால் இந்த ராசிக்கு ஆரும் இடத்தைப் பார்ப்பதால் கல்விமான்கள், நீதித்துறையினர், நீர்ப்பாசன துறை தொழில்புரிவோர், உப உணவுப்பயிர் செய்வோர் பயனடைவர். பத்திரிகைத்துறை ஜோதிடத்துறையில் ஈடுபட்டோர் பாராட்டுப்பெறுவர். உடல்ஆரோக்கியம் தொல்லை தரலாம். வைத்திய செலவுகள் அதிகரிக்கலாம்.

குருபகவான் ஒன்பதாவது பார்வையில். இந்தராசிக்கு எட்டாம் இடத்தைப் பார்ப்பதால், கலைத்துறை, ஓவியத்துறை, புகைப்படத்துறை சார்ந்தோர் உயர்வடைவர். புத்திரர்களால் மனக்குளப்பமும் கவலையும் உருவாகலாம். ராஜதந்திரிகள் பெரும் செல்வாக்குப்பெறுவார்கள்.

### கன்னி

(உத்திரம் 2-ம் பாதம் முதல், அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய)

குருபகவான் கன்னிராசியினருக்கு லாபஸ்தானத்தில் அமர்ந்து திருதியம், பஞ்சமம், சப்தமம் ஆகிய இடங்களைப் பார்ப்பதால் வீடு, நிலம், வாகனம் முதலியவைகளில் அனுகூலம் ஏற்படவழியில்லை. அலைச்சலும், மனக்கலக்கமும் உண்டாகும். கடன்கள் [illegible] முகமான செலவுகள் அதிகமாகும், குடும்பத்தில் மனக் கவலையுமுண்டு, இடமாற்றம் உண்டாகும்.

குருபகவான் ஐந்தாவது பார்வையாக இந்தராசிக்கு மூன்றும் இடத்தைப் பார்ப்பதால் அதிலும் சாதுர்யமான வழிகளில் நடந்து கொள்ள வேண்டியிருக்கும். அவசரப் புத்தியினல் கலகம் உருவாகும், பெண்களால் பொருள் விரயமும் உடல்நலிவும் ஏற்படும். சொத்து தகராறுகள் சாதகமான முடிவைத்தரும்.

குருபகவான் ஏழாவது பார்வையால் இந்த ராசிக்கு ஐந்தாம் இடத்தைத் திடமாக பார்ப்பதால் விரோதிகளால் லாபங்கள் கிட்டும். அரச சன்மானங்கள் கிட்டும். பெரிய மனிதர்களின் பாராட்டும் கிட்டும். இரும்பு தண்ணீர்சம்பந்தமான ஒருவித அச்சஉணர்வு உருவாகும் வாகனங்களுடன் அவதானமாக நடந்து கொள்ளவும்.

குருபகவான் இந்த ராசிக்கு ஒன்பதாவது பார்வையால் ஏழாம் இடத்தைப் பார்ப்பதால், தொழில்துறையில் ஏற்படும் பிரச்சனைகள் சுமுகமாக தீர்க்கப்படும். பழைய கடன்கள் ஓரளவு தீரும். சொந்த முயற்சியால் வாங்கிய சொத்து தகராறுகள் ஓரளவுக்கு சாதகமாக தீர்க்கப்படும், வாகனம் வாங்குவதற்கான யோகங்களும் உள்ளன.

(நாளை தொடரும்)

---

குரக்கன்

### உற்பத்தி அதிகரிப்பு!

(காங்கேசன்துறை)

தற்போதுள்ள சூழ்நிலையில் உணவு உற்பத்திப் போரில் ஈடுபடுமாறு மக்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து விவசாயிகள் குரக்கன் செய்கையில் அதிகமாக ஈடுபட்டுள்ளனர்.

மருதனமடம் உடுவில் போன்ற பகுதிகளில் தரிசாகக் கிடந்த காணிகள் கூடத் திருத்தப்பட்டுக் குரக்கன் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குரக்கனுடன் சாமை, வரகு, மரவள்ளி போன்ற பயிர்களைச் செய்கை பண்ணுவதிலும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். (86)

---

# இலங்கைப் பிரச்சனையில் வெளிநாட்டின் தலையீட்டை இந்தியா சகித்துக்கொள்ளாது!

இலங்கையில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்ச்சியாக நடந்துகொண்டிக்கும் போர் ஒரு முடிவில்லாத போராக நீடித்து ஐந்தாவது வாரமாக நடந்து வருகிறது.

ஜனதிபதி திரு ஆர். பிரேமதாசா விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்தத் தான் தயார் என்றும் ஆனல் இப்பேச்சுவார்த்தையில் சர்வதேச சமுதாயம் சம்பந்தப்படவேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளார்.

ஜனதிபதி கடந்த இரண்டு ஆண்டுகளாக விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தி வந்தார்.

**மாகாண சபை கலைப்பு**

இப் பேச்சுவார்த்தைகளின் போது வடக்கு – கிழக்கு மாகாண சபை கலைப்பையும், முக்கியமாக 6வது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்றும் அரசியல் விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வந்தனர்.

இவை இரண்டு விடயங்கள் குறித்தும், ஏனைய பல முக் பிரச்சனைகளுக்கான தீர்வு குறித்தும் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே வளர்ந்த அவநம்பிக்கை இன்றைய போராக வெடித்துள்ளது.

**2,000 பேர் பலி**

ஐந்து வாரங்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வரும் இப்போரில் 2,000க்கும் அதிகமானேர் இதுவரையில் கொல்லப்பட்டுவிட்டனர்.

ஈழத்தில் இடம்பெறும் இரண்டாவது பெரும் போரான இதில் இருதரப்புகளும் விட்டுக்கொடுக்கமால் 'இறுதிப்போர் இது' என்று சூளுரைத்துள்ளனர்.

அனைத்துலக சமுதாயம் சம்பந்தப்பட்டால் மட்டுமே விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த தான் முன் வருவார் என்று ஜனதிபதி புத்தளத்தில் வெள்ளைக் கொடி காட்டியிருந்தார்.

ஆயினும், தமிழ் மக்கள் பிரச்சனைகளுக்கான தீர்வு மீண்டும், மீண்டும், இழுத்தடித்துக்கொண்டே போகப்படுவதிலும், குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டு வருவதையிட்டும் ஆழ்ந்த கவலையை தெரிவித்துள்ள இந்திய மீண்டும் இலங்கைப் பிரச்சனையில்தலையிட்டுவிடக்கூடாது என இலங்கை இந்திய தலைவர்களுக்கு அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளது.

அனைத்துலக சமுதாயத்தின் தலையீடு என்பதில் இந்தியா இலங்கைப் பிரச்சனையில் தனித்து [illegible] எப்படியும் தவிர்த்து அல்லது தடுத்து, ஏனைய நாடுகளின் ஒன்றிணைந்த தலையீடு உருவாகக ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசா எதிர்பார்க்கின்றார் போலுள்ளது.

**ரஞ்சன் விளக்கம்**

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன்விஜேரத்ன, மறுபுறத்தில் விடுதலை புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை தொடக்குவதாயின் தென்கிழக்காசிய அணிசேரா நாடுகள், காமன்வெல்த் நாடுகள் அப்பேச்சுவார்த்தையின் போது பார்வையாளர்களாக அழைக்கப்படுவார்கள் என்று விளக்கம் வேறு அளித்துள்ளார்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசாவைவிட மேலும் ஒருபடி மேல் ஏறி புலிகள் ஆயுதங்களைப் போட்டால்தான் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கும் என்று இறுக்கமான முன் நிபந்தனை விதித்துள்ளார்.

ஜனதிபதி திரு. பிரேமதாசா, போரை நிறுத்தி மீண்டும் பேச்சுவார்த்தையை தொடக்கவேண்டும் என்ற இலங்கைஅரசின் விருப்பத்தை தெரிவித்திருக்கும் அதேவேளையில் அமைச்சர்ரஞ்சனே ஆயுத ஒப்படைப்பு என்ற முன்நிபந்தனை விதித்துள்ளதன் மூலம் தற்போதைக்கு பேச்சுவார்த்தைதொடங்கமுடியாத நிலையை உருவாவதை இது எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது.

ஜனதிபதி ஒருபுறம் ஒரு விதத்திலும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் மறுபுறத்திலும் இவ்வாறு கருத்து முரண்பட்டு நிற்கும்இவ்வேளையில் விடுதலைப் புலிகள் தமது நியாயமான இறுதி இலட்சியத்தை அடையும் வரை உறுதியுடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

**இந்தியா தலையிடமாட்டாது**

இந்தியாவுடன், பாதுகாப்பு செயலர் திரு. பேர்னுட்திலகரத்தின நடாத்திய பேச்சுவார்த்தைகளின்போது, இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடமாட்டாது எனறும், போராளிகள் தளம் அமைக்க இந்தியாவில் இடமளிக்கப்படமாட்டாது என்றும் உறுதிமொழி அளித்திருந்தாலும், இலங்கைப் பிரச்சனையில் வேறு எந்த வெளிநாட்டின் தலையீட்டையும் இந்தியா சகித்துக்கொள்ளாது என்று வலியுறுத்திக்கூறியது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய இக்கட்டான பிரச்சனையை ஏதோ ஒரு விதத்தில் சமாளிக்கும் திட்டத்துடனேயே சர்வதேச சமுதாயத்தின் தலையீடு என்ற ஒரு நிலையை உருவாக்கி, இந்தியாவினை பலவீனப்படுத்தி- இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் அழுத்தமான தலையீடடிலிருந்து இலங்கை தப்பிப்பிழைக்க எத்தனிப்பது போல இலங்கை அரசியல் சதுரங்க காய் நகர்த்தல் குறிகாட்டுகிறது.

\- மயூரன் -

---

**பஸ்ஊழியர் சம்பளம்**

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்து சபை, ஊழியர்களுக்கு நேற்று 16ம் திகதி முதல் சம்பளம் வழங்கப்படுகிறது.

---

## இராசி பலன்

18-07-90
புதன்கிழமை

ஏகாதசி மாலை 6-17வரை.
கார்த்திகை பகல் 11-55 வரை.
அமிர்தசித்தயோகம்.
கரிநாள்.
ராகுகாலம் பகல் 12 முதல் 1-30 வரை.
ஏகாதசி விரதம்.
நல்லநேரம் மாலை 4-00முதல் 6-30 வரை

மேடம்; குடும்பகவலை. அன்னியர் உதவி. தொழில் அலைச்சல். தாய்வழி விரோதம்.

இடபம்: எண்ணியது கைகூடும். பணவரவு. நண்பர் உதவி. சுபச்செய்தி.

மிதுனம்: குழம்பிய நிலை. தொழில் மந்தம் மக்களால் தொல்லை. மனச்சுமை.

கடகம்: விரும்பியமாற்றம், தொழில் லாபம். கடமை உணர்வு, பாராட்டு.

சிங்கம்: ஏமாற்றப் படுதல். கருத்துமோதல். கடன்படல். சோம்பல் மிகுதி.

கன்னி: அதிகாரம், ஆதரவற்றநிலை. மறைமுகஎதிர்ப்பு. குடும்பகவலை.

துலாம்: வெட்டிப் பேச்சு. அவமானம். நோய் தணிவு. பயணத்தடை.

விருச்சிகம்: சுபகாரியம். விருந்தினர்வருகை. உறவினர் சகாயம். பெரியோர்சந்திப்பு.

தனுசு: தவறவிடல். எதிரிகள் தொல்லை. பண அனுகூலம். நீண்ட பயணம்.

மகரம்: குடும்பகலகம். பண செலவு. அதிகாரிகள்தொல்லை. காரியத் தடை

கும்பம்: அதிர்ஷ்டவாய்ப்பு. மாமனர் உதவி. சிறுரோகம். வைத்திய செலவு.

மீனம்: உல்லாச பயணம். வீட்டில் சுபநிகழ்ச்சி. தொழில் சிறப்பு. மனநிறைவு.

\- ஜோஸ்யர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு-கிழக்கு மாகாணசபை ஊழியர் பாதுகாப்பாக உள்ளனர்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாகாண சபை அலுவலகங்களிலும், அமைச்சுக்களிலும் கடமை யாற்றியவர்கள் பத்திரமாக இருப்பதாகவும், தற்போது மாகாணசபை அலுவலகங்களில் அவர்கள் வழமைபோல் கடமையாற்றிக் கொண்டிருப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

திருமலையில் இருந்து கிடைத்த தகவலின்படி மாகாண சபைச் செயலக எல்லைக்குள் இராணுவம் நுழையவில்லை என்றும், தற்போது பொலிஸாரே அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும், மாகாண ஆளுநரின் பொறுப்பில் மாகாணசபை ஊழியர்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சில தமிழ் உத்தியோகத்தர்கள் உள் துறைமுக வீதியில் வைத்துக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டதாகவும், பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும் தெரிவுக்கப்பட்டது. (54)

## கிளிநொச்சி பாடசாலைகள் மூடப்பட்டன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பரந்தன், தர்மபுரம், விஸ்வமடு முதலான பகுதிகளில் உள்ள பாடசாலைகள் விமானத்தாக்குதல்களை அடுத்து மூடப்பட்டுள்ளன. (83)

## இலங்கை நிலைமை நீடித்தால் இந்தியா சும்மா பார்த்துக்கொண்டிராது -குஜ்ரால்

(சென்னை)

இலங்கையில் இன்று நிலவும் நிலை தொடர்ந்து நீடிக்குமானால் இந்தியா சும்மா பார்த்துக்கொண்டிருக்க மாட்டாது என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் கூறியதாக புதுடில்லி செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது.

தமிழக முதல்வர் முக்கியமாக இலங்கைத் தமிழர் பிரசசனை குறித்தும் ஆயிரமாயிரமாக தமிழகத்துக்கு வந்து குவிந்துகொண்டிருக்கும் அகதிகள்குறித்தும் வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ராலை நேற்று முன்தினம் சந்தித்துப்பேசினார். (அ)

## மருதனமடம் கல்விக் கோட்டத்தில் 10 பாடசாலைகள் முற்றாக ஸ்தம்பிதம்

(காங்கேசன்துறை)

மருதனமடம் கல்விக்கோட்டத்தில் 10 பாடசாலைகளில் அகதிகள் தங்கியுள்ளனர்.

நவாலி மகாவித்தியாலயம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, ஆனைக்கோட்டை றோ க த. பாடசாலை, நவாலி சென். பீற்றேர்ஸ் வித்தியாலயம், நவாலி அட்டகிரி சைவ வித்தியசாலை. மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம், சுதுமலை அ.த.க. பாடசாலை' சண்டிலிப்பாய் வடக்கு அ. த. க. பாடசாலை, சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றில் அகதிகள் தங்கியுள்ளனர்.

கடந்த மாதம் 19ம் திகதியிலிருந்து இக் கல்விக்கோட்ட பாடசாலைகள் எவையும் இயங்காது ஸ்தம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிது. (86)

## அகதிமுகாமில் பதுங்குகுழி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள யூனிவேர்சல் சமூகசேவைப் பிரிவான ''தேனீக்கள்'' பராமரிக்கும் இடம்பெயர்ந்தோருக்கான முகாமிற்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்கள் சென்று பதுங்குகுழிகளை அமைத்துக்கொடுத்துள்ளனர்.

## ஹெலி தாக்குதல் இருவர் பலி

(கிளிநொச்சி)

வட்டக்கச்சியில் இடம் பெற்ற ஹெலித் தாக்குதலில் கட்சன் வீதியைச் சேர்ந்த சிவலிங்கம் சுதாசினி (வயது 1 1/2) என்னும் குழந்தையும், சின்னச்சாமி இராசு 26 வயது என்பவரும் மரணமானார்கள்.

## குருநகர் கடலில் மிதந்த சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் உள்ள தொடர் மாடிக்கட்டடத்துக்கும், யாழ் 'பீச் இன்' ஹோட்டலுக்கும் இடையிலுள்ள கடல் பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஒரு ஆணின் சடலம் நேற்று முன்தினம் மிதந்து வந்ததை மக்கள் கண்டனர்.

மேற்படி சடலத்தை, விடுதலைப் புலிகள் போராளிகள் பொதுமக்களின் உதவியுடன் கடற்கரையில் புதைத்ததாகக் கூறப்படுகிறது. (வி)

## புங்குடுதீவில் கசிப்பு உற்பத்தியாளர் புலிகளிடம் சிக்கினார்கள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பலர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வசமாக சிக்கினார்கள்.

மண்காடு, வீராமலை, வல்லன், குறிச்சிக்காடு போன்ற புங்குடுதீவின் பல பகுதிகளிலும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவந்துள்ள உற்பத்திச் சாலைகளிலிருந்து பீப்பா, கேபிள்கள், பைப்புகள் போன்ற உபகரணங்களையும் பெருந்தொகையாகக் கைப்பற்றப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விடுதலைப்புலிகளினால் எச்சரிக்கை செய்யப்பட்டார்கள்.

## வட்டுக்கோட்டையில் முஸ்லிம்கள் தஞ்சம்

(வட்டுக்கோட்டை)

ஷெல், ஹெலி, பொம்மர் தாக்குதல்களை அடுத்து யாழ் பொம்மைவெளியில் இருந்து இடம்பெயர்ந்த 15 குடும்பத்தினர் வட்டுக்கோட்டை மேற்கில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

பொம்மைவெளியைச் சேர்ந்த இந்த 15 முஸ்லிம் குடும்பங்களும் வட்டுக்கோட்டை மேற்கில் உள்ள தனியார் வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.

வட்டுக்கோட்டை முதலி கோவிலடி அம்பாள் சனசமூக நிலையத்தினரும், இளைஞர்களும் சேர்ந்து இங்குள்ள தனியார் வீடுகளில் தங்கியிருப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்துள்ளனர். (139)

## "தமிழர்களை அழிப்பதற்கு தெற்கில் சிங்களவர்கள் ஒன்றுசேர்ந்துவிட்டார்கள்"

(யாழ்ப்பாணம்)

''தமிழர்களை அழிப்பதற்காகத் தெற்கில் சிங்களவர்கள் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். தேசிய பாதுகாப்பு நிதிக்கு அவர்கள் அள்ளி அள்ளிக் கொடுப்பதிலிருந்தே அது புரிகிறது. ஆனால் நம்மவர்கள் இன்னும் முழுமையாக ஒன்றுபட மறுக்கிறார்கள். இதற்கான காரணம் ''பணம்'' நமது மக்களில் சிலர் மண்ணை நேசிப்பதைவிடப் பணத்தை நேசிக்கிறார்கள்.

இவ்வாறு பருத்தித்துறையிலுள்ள இன்பருட்டிக் கிராமத்தில் நடைபெற்ற போர்க்கால அவசரக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர் கவிஞர் வாஞ்சிநாதன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டதாவது:- ''இன்று இராணுவத்தில் சேர்வதற்காக ஐம்பதினாயிரம் சிங்களவர்கள் 'கியூ' வில் நிற்கின்றார்கள். ஆனால் நம் தமிழ் இளைஞர்களில் பலர் இன்று வீதிகளில் நின்று பார்வையாளர்களாகப் பொழுதைப் போக்குகிறார்கள். தமிழினம் முற்றாக அழிந்தபின்பு தான் இவர்கள் போர்க்களத்துக்கு வருவார்கள் போலும்? இளைஞர்களே! நீங்கள் இதுவரை தூங்கியது போதும் இனியாவது நமது மண்ணை மீட்க ஒன்று சேருங்கள்.''

## கொழும்புத்துறையில் அகதிகள் தொகை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல்கள் காரணமாக வெளியிடங்களிலிருந்து இடம் பெயர்ந்து கொழும்புத்துறை கிழக்கிலுள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளோர் தொகை மேலும் அதிகரித்துள்ளது. தற்போது புதிதாக 250 அகதிகள் இம்முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

கொழும்புத்துறை கிழக்கு துரையப்பா வித்தியாலயம், இந்து மகாவித்தியாலயம், மணிப்புரி, வசந்தபுரம், ஆனந்தன் வடலி சந்தன மாதா தேவாலாயம் ஆகியனவற்றில் அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமசேவை அலுவலர்கள் திரு. கே. எஸ். இராசையா, திரு. எஸ். எம். டொமினிக் ஆகியோர் இம்முகாம்களிலுள்ள அகதிகளுக்குரிய நிவாரணப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டுவருகின்றனர். (54)

## முறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் கற்கும் மாணவருக்கான முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் 18ம் திகதி தொடக்கம் 29ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மாணவர்களும் போதனாசிரியர்களும் தமக்கு அண்மித்த பயிற்சிநிலையங்களில் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்படுகின்றனர்:

நல்லூர் ஸ்ரேசன் சி. சி. (சாதனா) த. க. பாடசாலை, கனகரெத்தினம் ம. ம. வி., புத்தூர்சோமாஸ்கந்தகல்லூரி இராமநாதன் கல்லூரி, டிறிபேக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, நெல்லியடி ம. ம. வி. மகளிர் பிரிவு ஆகிய பாடசாலைகளில் இப் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

## யாழ். மாவட்டத்தில் உரத்திற்கு தட்டுப்பாடு!

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தில் தற்போது உரவகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

காங்கேசன்துறை உரக்களஞ்சியத்தில் நீண்டகாலமாக உரவகைகள் கையிருப்பில் இல்லாதிருப்பதே இத்தட்டுப்பாடுக்குக் காரணம் என்று தெரியவருகிறது.

கமநல சேவை நிலையங்களில் இருந்த உரவகைகள் விவசாய அறிமுக அட்டை மூலம் விநியோகிக்கப்பட்டு முடிந்துள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. எஸ். லிங்கநாதன் தலைமையில் யாழ். மாவட்டத்தில் உள்ள 23 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கூடி உரத்தட்டுப்பாட்டை நீக்குவதற்கான வழிவகைகளை குறித்து அண்மையில் ஆராய்ந்தனர்.

இக்கூட்டத்தில் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தித் துறை அமைச்சின் இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் வட மாகாண சந்தைப்படுத்தும் அதிகாரி திரு. ஜி. சிதம்பரநாதன் கலந்துகொண்டு நடைமுறை நிலைப்பாடுகள் பற்றி உரையாற்றினார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள் பலரும் கடன் அடிப்படையில் உரம் கொள்வனவு செய்ய உதவுமாறும் உடனடியாக வெங்காயச் செய்கையாளர்களுக்குத் தேவையான உரவகைகளைப் பெற்றுத்தருமாறும் கேட்டுக் கொண்டனர்.

போக்குவரத்து வசதி ஏற்பட்டதும் உடனடி உரத் தேவைகளை நிறைவு செய்வதாக திரு. ஜி. சிதம்பரநாதன் உறுதியளித்தார். (139)

## முல்லை அகதிகளுக்கு தென்றல் உதவி

(வட்டுக்கோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து யாழ் நகர் வந்தவர்களின் உணவு, உடைக் கஷ்டங்களை நீக்குவதற்காக ஆரியகுளம் சந்தியில் உயர்கலைக் கல்லூரியின் சமூகசேவைப் பிரிவான ''தென்றல்'' நிறுவனம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ். தென்றல் நிறுவனத்தைச் சேர்ந்த தொண்டர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளிலும் உணவு, உடை வகைகளைச் சேகரித்து வருகின்றனர்.

முல்லைத்தீவில் இருந்து வந்தவர்களுக்காக இதுவரை 50 ஆயிரம் உடுப்புக்களையும், மற்றும் உணவு வகைகளையும் சேகரித்திருப்பதாக தென்றல் நிறுவனத்தினர் தெரிவித்தனர். (139)

## தகவல் தாருங்கள்

★ திருகோணமலை இந்துக் கல்லூரி ஆசிரியரும், அன்புவழிபுரம் 336ம் இலக்கத்தில் வசித்தவருமான ஆசிரியர் வே. தில்லைநாதன், மனைவி ஆசிரியை திருமதி லீலாவதி தில்லைநாதன், மகள் மாணவி செல்வி பாடினி தில்லைநாதன் என்பவர்களை கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. எஸ். எம். அருளம்பலம் தேடுகிறார்.

## கொள்ளை

(உடுவில்)

உடுவில் டச் வீதியிலுள்ள வீடொன்றில் சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ரேப் ரெக்கோடர், சுவர்மணிக்கூடு, மோட்டர் போன்ற பொருள்கள கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மக்கள் வங்கி அபிவிருத்தி உத்தியோகத்தர் டன்போத் ஏ. பாலச்சந்திரன என்பவர் வீட்டிலேநேற்றுமுன்தினமிரவு இக்கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றது.

## வடபகுதிக்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்

(கொழும்பு)

யாழ் மாவட்ட மக்களுக்கு நிவாரண உணவுவகைகளையும் மற்றும் அத்தியாவசிய பொருட்களையும் கப்பல்மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. சரித்தரத்வைத்தைக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். (அ)

## மீன் பை வழிப்பறி

(யாழ்ப்பாணம்)

சந்தையில் வாங்கிய மீன் பையுடனேயே பறிபோன துணிகரத் வழிப்பறி சம்பவம் கல்வியங்காட்டில் நிகழ்ந்துள்ளது.

கல்வியங்காடு மீன் சந்தையில் முப்பது ரூபாவுக்கு மீன் வாங்கிய ஆசிரியர் ஒருவர் மீன் பையுடன் மரக்கறி வாங்கச் செல்லும்போது திடீரென்று இனந்தெரியாத நபரொருவர் மீன் பையைப் பறித்துக்கொண்டு ஓடி மறைந்துவிட்டாராம். (54)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயங்கமுடியாத நிலையில் யாழ். மருத்துவ பீடம்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் இயங்கமுடியாத நிலையில் உள்ளது என்று யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆசிரியர்கள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளனர்

12 ஆசிரியர்கள் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, போக்குவரத்து தடை காரணமாகப் பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் பிரயாணம் செய்துகொள்ள முடியாத நிலையில் உள்ளனர். இன்னும் சிலர் வீடு வாசல்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர் ஆகவே யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் இயங்கமுடியாத நிலையில் உள்ளது. எல்லா விரிவுரைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளது

யாழ் போதனா வைத்திய சாலை பாதுகாப்பு காரணமாக வேறிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் மருத்துவபீட மாணவர்களின் மருத்துவ மனை பயிற்சியும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வடக்கிலும். கிழக்கிலும் பலாத்காரம் நீடிப்பதால், வகைதொகையில்லாது மக்கள் உயிரிழப்பதோடு தமது ஆதனங்களையும் இழந்து வீடு வாசல்களைவிட்டு இடம் பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதோடு போக்குவரத்து தடையும் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக உணவு, மருத்துவ வசதிகளும் பாரிய அளவில் பற்றுக்குறையாகவுள்ளன. போஷாக்கின்மையால் தொற்றுநோய்கள் ஏற்படக்கூடிய அபாயமும் உள்ளது.

# தமிழீழ மீட்பு நிதி: மாணவர் குழுக்கள் ஆதரவாகபிரசாரம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் விடுதலைப் புலிகளால் தற்போது வசூலிக்கப்பட்டுவரும் தமிழீழ மீட்புநிதி தொடர்பான விளக்கங்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையிலும். அறிமுகப்படுத்தும் நோக்கிலும், மாணவரமைப்புக்கள் சில விடுதலைப்புலிகளுக்கு உதவியாக புதியமுறைகளைக் கையாளுகின்றன.

இதன்முன்னேடியாக வடமராட்சிப்பகுதியில் இவ்வாரம் முதல் மாணவர் அமைப்புக்கள் தெருக்கூத்துப் பாணியில் நிகழ்ச்சிகளை அமைத்து வீதி வீதியாக கூத்தாடி மக்களைக் கூட்டி தமிழீழ மீட்புநிதி பற்றிய விளக்கமளித்துவருகின்றனர்.

கடந்த ஞாயிறு இரவு புலோலி மேற்கு, பருத்தித்துறைப் பகுதிகளில் உள்ள ஒழுங்கைகள் எல்லாம் இக்குழுவினர் சென்று மேற்படி விளக்கங்களை அளித்துச் சென்றனர். (56)

## யாழ். நகரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குண்டுபோடுகின்றேன்''

''3000 அடிக்கு கீழே போக வேண்டாம். கஷ்டமாக இருந்தால் உடன் பலாலிக்கு போகவும்,''

மற்றொரு விமானி ''சேர். எனது விமானத்தின் பொதிகளை வெளியே தள்ளும் இயந்திரம் திடீரென இயங்காது இறுகிய வண்ணம் இருக்கிறது. இதனால் பொதிகளை வெளியேதள்ள முடியவில்லை''

''நீயும் உடனே பலாலிக்கு திரும்பு'' (வி)

## கோட்டைப்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டன்வந்த மூன்றுவிமானங்கள் 30 நிமிடநேரம் வானத்தில் பல தடவைகள் வட்டமிட்டு 12 பொதிகளைப்போட்டபின் 5-25 க்கு வடக்கு நோக்கிச் சென்று 30 நிமிடங்களின்பின் அதே விமானங்கள் திரும்பி 5-55க்கு வந்து சுமார் 25 நிமிடநேரங்கள் வானில் சுற்றி மீண்டும் 12 பொதிகளை வீழ்த்தின. ஆனாலும் பொதிகள் கோட்டைக்குள் விழுந்தனவா என்பது சந்தேகதத்திற்குரியதாகும்.

விமானங்களைத் தொடர்ந்து சென்ற ஹெலிகொப்டர்செல்லும்போது திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளில் குடியிருப்புக்களைநோக்கி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் சென்றது, அதனைத்தொடர்ந்து கோட்டைப்பகுதியிலிருந்து ஷெல்களும் துப்பாக்கி வேட்டுக்களும் நகரைநோக்கி தொடர்ச்சியாக தீர்க்கப்பட்டவண்ணமிருந்தன. (56)

## கடற்படையினரால் நயினை - குறிகட்டுவான் படகு தீவிர சோதனை!

(புங்குடுதீவு)

நயினாதீவிலிருந்து குறிகாட்டுவான் நோக்கிப் பிரயாணிகளுடன் வந்துகொண்டிருக்கும் படகுகள், ஸ்ரீலங்கா கடற் படையினரால் தீவிரமாகச் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

**படை அதிகாரி எச்சரிக்கை**

நேற்று முன்தினம் பிரயாணிகளுடன் வந்துகொண்டிருந்த படகுகளைச் சோதனையிட்ட கடற்படை அதிகாரி ஒருவர், ''நயினாதீவிலிருந்துபிரயாணங்களை மேற்கொள்பவர்கள் எமது உத்தரவு பெற்றுத்தான் செல்லவேண்டும். குறிகட்டுவான் பகுதிகளை அண்டிய இடங்களில் இருந்து வருபவர்கள் எமக்கு அறிவித்துவிட்டு வரவேண்டும். அவ்வாறு வரத் தவறினால், வருகிறவர்களின் படகுகள் நிர்மூலமாக்கப்படும்; அதில் பயணம் செய்பவர்கள் சுடப்படுவார்கள்'' என்று கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளார். (101)

## மாணவர்கள் கருத்தரங்கு

(நாவற்குழி)

க. பொ. த. உயர்தரப் பரீட்சை பற்றிய உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 9-00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் தென்மராட்சியில் உள்ள சகல உயர்தர வகுப்பு மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (107)

## சுன்னாகத்தில் பனை அபிவிருத்திச் சபை செயற்பாட்டு அலுவலகம்

[யாழ்ப்பாணம்]

பனை அபிவிருத்திச் சபையின்தொழிற்பாடுகள்தொடர்பான செயற்பாட்டு அலுவலகம் கடந்த சில தினங்களாக சுன்னாகத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் உணவுஉற்பத்தித் தொழிற்சாலையில் இயங்கிவருகிறது.

பதற்ற நிலைகாரணமாகவும் போக்குவரத்து வசதியீனம் காரணமாகவும் இச்செயற்பாடுகள்பரவலாக்கப்பட்டுள்ளன.

மீசாலை பனை வெல்லத் தொழிற்சாலையிலும் இச்சபையின் தென்மராட்சிப் பகுதி உத்தியோகத்தர்கள் சிலர் கடமையாற்றிவருகின்றனர்.

நகரில் வசிக்குப் உத்தியோகத்தர் இச்சபையின் தலைமைச் செயலகத்திலும் சந்தைப்படுத்தும் பிரிவு நிலையங்களிலும் கடமையாற்றி வருகின்றனர். (123)

## பூமியதிர்ச்சி 100 பேர் பலி

(பிலிப்பைன்ஸ்)

மணிலா நகருக்கு அருகே நிகழ்ந்த பயங்கர பூமியதிர்ச்சியில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன் கட்டிட இடிபாடுகளுக்கிடையே 300 பேருக்கும் அதிகமானோர் சிக்கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இன்று ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

90ம் ஆண்டிற்கான க. பொ. த. (உயர்தர) பரீட்சை ஒத்திவைக்கும் விஷயம் தொடர்பாக தமிழ் பேசும் மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கிறது. யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச பிரதிநிதிகளையும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## க. பொ. த (உயர்தர) பரீட்சை ஒத்திவைப்பில்லை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் பதற்றநிலை நிலவிய போதும் க. பொ. த. உயர்தர பரீட்சை பின் போடப்படமாட்டாது என்று உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாணவர்கள் நாட்டின்ஏனைய தொகுதிகளிலிருந்து பரீட்சை எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## வல்லைவெளியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கீழே இறங்கி கைகளை உயர்த்தி பிரயாணிகள் என்பதை அடையாளம் காட்டியபோதிலும் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றது. (51)

## குருநகரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குருநகர் பகுதியில் கடற்கரை வீதியில் அமைந்துள்ள அர்ச். செபஸ்தியார் தேவாலயத்துக்கு அருகாமையில் உள்ள வீடுகளே இந்த குண்டு வீச்சில் சேதமடைந்தன அண்மையில் புதிதாக கட்டப்பட்ட இரு மாடி வீடுகளும் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இவ் விமானங்கள் தாக்குதல்களில் ஈடுபட்டு, யாழ். கோட்டைக்கு கிட்டிய பகுதிகளில் குண்டுகளைப் போட்டவண்ணம் இருந்தன. திடீரென ஒரு விமானம் மிகத்தாழப் பறந்து அர்ச். செபஸ்தியார் தேவாலயத்துக்கு அருகில் ஒரு குண்டைப் போட்டதினாலேயே மேற்படி வீடுகள் அனைத்தும் சேதமடைந்ததுடன் தேவாலயத்துக்கும் சேதமேற்பட்டது.

30 நிமிட இடைவெளியின் பின்பு இந்த விமானங்கள் மீண்டும் யாழ் நகரின் சில இடங்களில் குண்டுகளைப் போட்டன. இச் சந்தர்ப்பத்தில் 2ம் குறுக்குத் தெருவின் மத்தியிலும் குண்டுகள் விழுந்ததில் பத்து வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இரவு 7 மணியளவில் குருநகர் பகுதியில் குண்டுவீச்சுக்கு இலக்காகிய வீடுகளை பொதுமக்கள் கூடிநின்று பார்த்தபோது விமானங்களின் சத்தங்கள் வானில் மீண்டும் கேட்டபோது அவ்விடத்தில் குழுமி நின்ற மக்கள் அனைவரும் நாலா திசையும் சிதறி ஒருவருடன் ஒரு [illegible] பலர் காயமடைந்ததுடன் சில சைக்கிள்களும் சேதமடைந்தன. (வி)

## மட்டக்களப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று முன்தினம் மூன்று விமானங்கள் குண்டு வீச்சுக்களை நடத்தின.

## குண்டுவீச்சினால்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அதிபரின் அலுவலகம் முற்றுக நாசமாக்கப்பட்டுள்ளது. இவ் அலுவலகத்திலிருந்த மூன்று குளிரூட்டிச் சாதனங்களும் சிதறுண்ட நிலையில் உள்ளன.

சகல பிரிவுகளிலுமுள்ள யன்னல் கண்ணாடிகள். ரீயுப் லைற்றுகள் மேல்மாடியிலுள்ள சீற் கூரைகள் எல்லாம் உடைந்துள்ளன.

இதனால் ஊழியர்கள் தொடர்ந்து கடமைசெய்ய முடியாது அச்சத்துடனும் பீதியுடனும் காணப்படுகின்றனர். (71)

## மின்சாரம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுவிட்டது. யாழ் மாவட்டத்தின் இதர பகுதிகளிலும், மின்சாரம் தடைப்பட்டதாக கூறப்படுகிறது.

யாழ் நகரப்பகுதியில் 2 பொம்மர்கள், குண்டுவீசி தாக்குதலை நடத்திய சமயம் யாழ் நகரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

## முகாம்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாங்குளம் பகுதிகளில் இலங்கை இராணுவம் தீவிரதாக்குதல்களை ஆரம்பித்துவிட்டதாக பிந்திகிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பீரங்கிப்படையுடன் விமானக் குண்டு வீச்சுக்களும், ஹெலிக்கப்டர்களிலிருந்து இயந்திரத் துப்பாக்கி வேட்டுக்களும் சரமாரியாக தீர்க்கப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

இத்தகவல்களை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் நேற்று உத்தியோக பூர்வமாக தெரிவித்துள்ளார். (அ)

## அகதிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியின் சமூகசேவைப் பிரிவான 'தென்றல்' அமைப்பின் தலைவர் திரு. கா. யோ. கிரிதரன் தெரிவித்தார்.

திருமலை அகதிகளுக்கென மேலும் 25,000 உடைகளை சேகரிக்க இருப்பதாகவும், அரிசி, தேங்காய், பால்மா, மரக்கறி வகை போன்ற உணவுப் பொருட்களும் பெருமளவில் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் இவை மிக விரைவில் முல்லைத்தீவிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குண்டுவீச்சுத் தாக்குதலால் காயமடைந்தவர்களுக்கு இரத்ததானம் செய்வதற்கு புதிய உயர் கல்லூரியின் 30 மாணவிகளும் 15 மாணவர்களும், அதிபர் மற்றும் விரிவுரையாளர்களும் பெயர்களைப் பதிவுசெய்துள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

## தனது மகனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குத்தான் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

''தமிழீழம் காண்பதற்காக எல்லோரும் தங்களது உயிரை மட்டுமல்ல உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராக வேண்டும். என்றும் அவர் மேலும் கூறினார்.

திருமதி கி. செல்வராணியின் கணவர் கடந்த வருடம் தமிழ்க்குழு ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் அன்னையர்கள் தமது பிள்ளைகளை போர்முனைக்கு அனுப்பி வருவதாகத் தெரிகிறது. (107)

# ஆனைக்கோட்டை அகதிகள் முகாம்

(வட்டுக்கோட்டை)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையில் கடந்த ஜூன் மாதம் 16-ம் திகதி முதல் அகதி முகாம் இயங்கி வருகின்றது.

இந்த முகாமில் கொட்டடி, நாவாந்துறை, பொம்மைவெளி, வண்ணார்பண்ணை, ஓட்டுமடம் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களே தஞ்சமடைந்துள்ளனர்.

கோட்டை முகாமிலிருந்தும் பலாலி முகாமிலிருந்தும் ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களுக்கும் ஹெலி, பொம்மர் தாக்குதல்களுக்கும் அஞ்சியே தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து இங்குவந்து தஞ்சமடைந்தனர்.

25 குடும்பங்களைச் சேர்ந்த 125 பேர் இந்த முகாமில் தங்கியுள்ளனர்.

ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலையத்தினரும், ஆனைக்கோட்டை இந்து இளைஞர் சங்கத்தினரும், சண்டிலிப்பாய் இளைஞர் கழகத்தினரும் கடந்த 16-ம் திகதி முதல் இம்மாதம் 11-ம் திகதிவரை இந்த அகதிகளுக்கு உதவி செய்தனர். இம்மாதம் 12-ம் திகதி முதல் சர்வோதயத்தினர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளனர். திருச்சிலுவை வைத்திய நிலையத்தின் வைத்தியர்கள் இந்த முகாமுக்கு வந்து வைத்திய பரிசோதனை செய்து மருந்து வகைகளையும் வழங்கிச் சென்றுள்ளனர். (139)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஜூலை மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org